செ.வெ.எண்:542 நாள்.1.7.2010

# செய்தி வெளியீடு – 1.7.2010

## தமிழகத்தில் நிலத்திற்கு அடியில் உள்ள "பிளாட்டினம்" படிமங்களை கண்டறிவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள இந்திய புவியியல் ஆய்வுத்துறை – தமிழ்நாடு கனிம நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் !

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் கையெழுத்து !

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலத்திற்கடியில் படிந்துள்ள வெண்தங்கம் எனப்படும் பிளாட்டினம் கனிமத்தைக் கண்டறிவதற்காக இந்திய புவியியல் ஆய்வுத்துறை கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வு செய்துவருகிறது. இந்த ஆய்வின் பயனாக, இதுவரை மேட்டுப்பாளையம் முதல் நாமக்கல் வரை பல்வேறு பகுதிகளில் நிலத்திற்கு அடியில் "பிளாட்டினம்" படிமங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது கண்டறியப்பட்டுள்ள பிளாட்டினம் கனிமங்களை வணிக நோக்குடன் ஆய்வு செய்யவும், அக்கனிமங்களைப் பயன்படுத்தி பல்வேறு தொழில்கள் தொடங்கவும், மேலும் புதிய இடங்களில் கனிமங்கள் குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம், இந்திய புவியியல் ஆய்வுத்துறையுடன் இணைந்து விரிவான அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இன்று (1.7.2010) புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கொல்கத்தாவில் உள்ள இந்திய புவியியல் ஆய்வுத்துறைத் தலைவர் திரு.என்.கே.தத்தா, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்நிகழ்வின்போது, சட்ட அமைச்சர் திரு. துரைமுருகன், மத்திய சுரங்கத் துறைச் செயலாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., தமிழக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் திரு.தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9